1995 மார்ச் 20]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆண்டு 868 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. திருமணத்தொகை வழங்கப்படடிருக்கிறது. ஆனால் பெறப்பட்ட மனுக்கள் 1880. அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை 5 கோடி. அதை எல்லா மாவட்டங்களுக்கும் நாம் பிரித்து கொடுக்கிறோம். அதிலே 868 மனுக்களுக்கு அந்த உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 74, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

74—

இராமலிங்க அடிகளாருக்கு வடலூரில் கோட்டம் அமைத்தல்

*21632—திரு. **ஆர்.பி. பரமசிவம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் இராமலிங்க அடிகளாருக்கு வடலூரில் கோட்டம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை என்றும், அன்பே சிவம் என்றும் இயம்பிய வள்ளலார் பிறந்த காரணத்தினால் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் என்று பெயரை வைத்து அந்த மாவட்டத்திற்கே பெருமை சேர்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அவர்களுக்கு நன்றியை காணிக்கையாக்குகின்றேன். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற மனித உருவில் கடவுளாக அவதரித்த வள்ளலாருக்கு வடலூரில், ஜோதியாக காட்சி தரும் இராமலிங்க அடிகளார் அவர்களுக்கு அங்கே ஒரு கோட்டம் அமைத்து அந்த வடிவமைப்பினால் பொது மக்கள் பயன் பெருகின்ற வகையில் இதய தெய்வத்தின் சாதனை மகுடத்தில் மேலும் ஒரு சாதனை கல் பொருத்திட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளலாரின் பெருமையைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர் பெருமைக்குரியவர், நிலைத்த புகழுக்கு உரியவர் என்ற காரணத்தினாலே, அருட்பெரும் ஜோதி, தனிப்பெரும் கருணையாய் இருந்த காரணத்தினாலே தமிழகத்தின், தமிழக மக்களின் நம்பிக்கை ஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அவரைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலே, அவருடைய திருநாமத்திலே ஒரு மாவட்டத்தை அமைத்திருக்கிறார்கள். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். ஆகவே, அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுடைய வாட்டத்தை போக்குவதற்கு வறுமை, ஏழ்மை இல்லாமல் அகற்றுவதற்கு இந்த அரசு, புரட்சித் தலைவி அவர்களது அரசு தனி அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, வாட்டத்தைப் போக்குகின்ற பணியிலே இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அவருடைய திருநாமத்திலே ஒரு மாவட்டம் அமைத்திருக்கின்ற காரணத்தினாலே மீண்டும் கோட்டம் அமைக்கத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

முற்பகல் 10–55

திரு. ஆர். பி. பரமசிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டம் அமைப்பதனால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இருக்கும் என்ற காரணத்தினாலும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பெயரும் ஆண்டாண்டுதோறும், காலந்தோறும் மறக்க முடியாத ஒரு நினைவுச் சின்னமாக அமைகின்ற காரணத்தினாலும் இதை மறுபரிசீலனை செய்து அங்கே கோட்டம் அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய. விரும்புகிறேன்.

1995 மார்ச் 20]

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை காலங்கள் உருண்டோடினாலும், எத்தனை யுகங்கள் மாறினாலும் அவருடைய திருநாமம் நிலைத்து நிற்கின்ற அளவுக்கு அவருடைய பெயரிலே புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டத்தை அமைத்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. சிவசுப்பிரமணியன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி; தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி' என்று சொல்லி 'ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்று சொன்ன வள்ளலார் அவர்கள் அவதரித்த மருதூர் கிராமத்திலேயே இப்பொழுது நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அந்த வள்ளல்பிரான் அவதரித்த அந்த இடத்தில் இன்றைக்கு சுற்று மதில் எழுப்பப்பட்டு புரட்சித் தலைவி அவர்களால் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி அங்கே பசித்து வருபவர்களுக்கு உணவு தர வேண்டும் என்று சொன்னதனுடைய அடிப்படையில் இன்றைக்கு 20 இலட்சம் ரூபாயில் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வந்த பிறகு அங்கே தர்மசாலை நிறுவப்பட்டு புரட்சித் தலைவி அவர்களால் 3 இலட்சம் ரூபாய் அதற்கு நன்கொடை வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இன்றைக்கு சிற்சபை, பொற்சபை, சத்தியஞான சபையிலே 6 இலட்சம் ரூபாய்க்கு புதுப்பிப்பதற்கான திருப்பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த நெய்வேலி அருகே இருக்கின்ற அந்தச் சாலையிலே கடைகள் கட்டிவிட வேண்டுமென்று கேட்டு புரட்சித் தலைவி அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டு அந்த வேலையும் தொடங்கப்பட இருக்கிறது. ஆகவே வள்ளலார் வாழ்ந்த அந்த் பூமியில் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய் ஆட்சியில் பல்வேறு காரியங்களைச் செய்து இருந்தாலும் இந்த வள்ளலார் கோட்டம் அமைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் நம்முடைய வள்ளலார் அவர்கள் வாழ்ந்த இடத்தையும் கையகப்படுத்தி அரசு அதனை அரசினுடைய இல்லமாக ஆக்க வேண்டும் என்று சொல்லி நான் இந்த நேரத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் புரட்சித்

தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதைச் செய்துதர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வள்ளலாரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே ஆற்றிவருகின்ற பணிகளை இங்கே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, பாராட்டுக்குரியவர்களை பெருமைக்குரியவர்களை பெருமைப் படுத்துவதில் நிலைத்த புகழுக்குரியவர்களாக மாற்றுவதில் அக்கறை உள்ள அரசாக இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவி அவர்கள் அரசுதான் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கோட்டம் அமைப்பதைப் பற்றியும், அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக்குவதைப் பற்றியும் நிதி நிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

75—

நாச்சியார்கோவில் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்துதல்

26942—* **திரு. இராம. இராமநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவில் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.